செ.வெ.எண்:49 நாள்:20.07.2018

# முன்னாள் படைவீரர்கள் சிறப்பு குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் தொழில் முனையோர் கருத்தரங்கு நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைத்தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் தொழில் முனைவோர் கருத்தரங்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 48 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் கலந்து கொண்டனர். 15 முன்னாள் படைவீரர், சார்ந்தோர்கள் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள். மேலும், கருத்தரங்கில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மாவட்ட முன்னோடி வங்கி, மாவட்ட தொழில் மையம், தாட்கோ, நபார்டு ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு தங்கள் துறை தொடர்பான திட்டங்கள் குறித்து கருத்துரைகளை வழங்கினார்கள்.

இக்கருத்தரங்கில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஜெ.பாலாஜி, உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் கா.குணசேகரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பி.மணிவேல், முன்னோடி வங்கி மேலாளர் எஸ்.இளஞ்சேரன், பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் ராமோ.சத்திமாய், மாவட்ட மேலாளர் தாட்கோ அம்பேத்கார், மேலாளர் நபார்டு எல்.எஸ்.நவீன்குமார், கண்காணிப்பாளர் முன்னாள் படைவீரர் நலன் கலையரசி மற்றும் முன்னாள் படைவீரர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**